IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No.105/2016

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.25 PM.

பி.வா.சா.1 சாட்சி பாண்டியம்மாள் க.பெ.

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 12.11.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. நான் எந்த வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எழுதப்படிக்க தெரியாது. 1 முதல் 3 வாதிகள் எனது உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணமானது என்றால் 45 வருடம் இருக்கும். எனது அப்பா தர்மராஜ் எப்போது இறந்தார் என்றால் இறந்து 25 வருடம் இருக்கும். எனது அம்மா எப்போது இறந்தார் என்றால் இறந்து சுமார் 12 வருடம் இருக்கும்.

2. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்து எத்தனை என்றால் தெரியாது. வாதிகள் வழக்கை எனது வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வழக்கு சொத்தில் பாதி எனது தந்தைக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் மீதி பாதி சொத்து எனது தந்தையும், எனது சகோதரர்களும் சுயமாக சம்பாதித்த சொத்து என்றால் சரிதான்.

3. எனக்கு நல்ல முறையில் செல்வ செழிப்புடன் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள் ஆகும். எனது 2 பிள்ளைகள் திருமணத்திற்கும் தாய்மாமன் என்ற முறையில் எனது சகோதரர்களும், தாத்தா என்ற முறையில் எனது தந்தையும் உரிய சீர்வரிசைகள் செய்தார்கள் என்றால் சரியல்ல.

4. எனது மகன் திருமண பத்திரிக்கையில் தாய்மாமன் பெயர்களாக எனது சகோதரர் பெயர்கள் குறிப்பிட்டு இருந்தேன் என்றால் சரிதான். நான் திருமணம் முடித்த 2, 3 வருடங்களில் எனது தந்தை எனக்கு தான ஆவணம் எழுதிகொடுத்தாரா என்றால் இல்லை. எஸ்.பி.நத்தம் கிராமத்தில் சர்வே எண்.237/11 ல் 1 ஏக்கர் 6 செண்டை எனது தந்தை எனக்கு தானமாக எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் எனது சகோதரர்களுக்கு தலா 2 ஏக்கர் எழுதிகொடுத்தார்.

5. தான செட்டில்மெண்டு எழுதிகொடுத்ததற்கு பிறகு 21.01.1989 ல் ஊர் மத்தியஸ்தர்கள் முன்னிலையில் 1 முதல் 3 வாதிகளுக்கு எனது பெற்றோர்கள் வாய்மொழியாக பாகபிரிவினை செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வாய்மொழியாக பாகபிரிவினை செய்ததன் மூலமாகத்தான் 3ம் வாதி அர்ஜுணன் அவரது மனைவி அழமேலுக்கு 25.05.1991 ல் பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தெரியாது.

6. மேற்படி கிரையம் பதிந்த விபரம் தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்றால் சரியல்ல. 3ம் வாதி 4ம் வாதிக்கு கிரையம் கொடுத்ததன் படியே வாய்மொழியாக பாகபிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1989ம் ஆண்டு வழக்கு சொத்தை பொறுத்து எனது தந்தையும், சகோதரரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள்

என்றும் அதன்படி A அட்டவணை சொத்து எனது பெற்றோர்களுக்கும் B அட்டவணை சொத்து 1ம் வாதிக்கும், C அட்டவணை சொத்து 2ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்டு அதன்படி அனுபவம் செய்து பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

7. 4 ல் 1 பாகம் அனுபவம் செய்து வருவதற்கு ஆதரவாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அப்படி ஒரு ஆவணம் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் அதை நான் பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

8. எனது 2 மகன்களுக்கு தான ஆவணம் நான் எழுதி வைத்தேனா என்றால் எழுதி வைத்தேன். எதன் அடிப்படையில் எனது மகன்களுக்கு தான ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டு எழுதிகொடுத்தேன். மேற்படி எழுதிகொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் கொத்தனார் வேலை செய்கிறார்.

9. கள்ளிக்குடியில் எனக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் உள்ளது. எத்தனை வீடு உள்ளது என்றால் 3 வீடுகள் 4 கடைகள் உள்ளது. எனது தந்தை தான செட்டில்மெண்டு மூலம் எழுதி வைத்துள்ள எஸ்.பி.நத்தம் கிராமத்தில் உள்ள சொத்தை விற்றுதான் மேற்படி வீடு, கடைகள் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கான பாகம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதால் நான் எனது 2 மகன்களுக்கும் தான

ஆவணம் எழுதி வைக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு எதிராக தவறாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் வழக்கு அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 04.20 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.12 10:22:30 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.